

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்குட்பட்ட திருமலைராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுமான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தலைவர் ப.க.சிவகுருசாமி, ஸ்ரீராமபுரம் பேரூராட்சி தலைவர் திருமதி அ.சகிலா, துணைத்தலைவர் ப.முருகேசன், உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்) திருமதி மனோரஞ்சிதம், பேரூராட்சி செயல் அலுவலர் சிவக்குமார் உட்பட பலர் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.09.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, 168வது வார்டு, கிண்டி, அரிமா சங்க லேபர் காலனி உயர்நிலைப் பள்ளி, 169வது வார்டு, சின்னமலை, புனித பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளி, 170 வது வார்டு, கோட்டூர்புரம், சென்னை உயர்நிலைப் பள்ளி, 172 வது வார்டு, கிண்டி, மடுவின்கரை, சென்னை மேல்நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் இரா. தலைவர் துரைராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், உயரலுவர்கள், வட்டச் செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக வளாகத்தில்

# ரூ.100 கோடியில் கலைஞர் நூற்றாண்டு மருத்துவ ஆராய்ச்சி மையம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, செப்.11-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.09.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 168வது வார்டு, கிண்டி அரிமா சங்க லேபர் காலனி உயர்நிலைப் பள்ளி, 169வது வார்டு, சின்னமலை புனித பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளி, 170 வது வார்டு, கோட்டூர்புரம், சென்னை உயர்நிலைப் பள்ளி, 172 வது வார்டு, கிண்டி, மடுவின்கரை, சென்னை மேல்நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 23.07.2009 அன்று முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் 1.43 கோடி குடும்பங்கள் பயனாளிகளாக சேர்க்கப்பட்டது. முதலமைச்சர் அவர்களால் 11.01.2022 முதல் 5 ஆண்டுகளுக்கு ரூ.7,730 கோடி (ஆண்டுக்கு ரூ.1,546 கோடி) இத்திட்டத்தின் மூலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் யுனிடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதில் அரசு மருத்துவமனைகள் 853, தனியார் மருத்துவமனைகள் 969 ஆக மொத்தம் 1822 மருத்துவமனைகள் இக்காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றன. இக்காப்பீட்டுத்திட்டத்தில் 1513 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறைகளும், 8 சிறப்பு அறுவை சிகிச்சை முறைகளும், 52 முழுமையான பரிசோதனை முறைகளும், 11 தொடர் சிகிச்சை முறைகளும் உள்ளன. ஒன்றிய அரசும் மற்றும் தமிழ்நாடு அரசும் இணைந்து 11.09.2018 அன்று இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 23.09.2018 அன்று முதல் துவங்கப்பட்டது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டம் தொடங்கப்பட்டு 2023 செப்டம்பர் மாதம் 5 ஆண்டுகள் நிறைவடைகிறது. தமிழ்நாட்டில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உள்ள 1.43 கோடி குடும்பங்களுக்குள் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியாக 86,48,748 குடும்பங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளனர். இத்திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு ஓர் ஆண்டிற்கு ரூ.5 இலட்சம் வரை காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை மேற்கொள்ளலாம். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்களிப்பு 60 : 40 விழுக்காடு ஆகும்.

முதமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் 23.07.2009 முதல் 15.08.2023 வரை 1,30,85,392 பயனாளிகள் ரூ.12,091 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர். 1,44,59,810 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.849/ வீதம் மொத்த காப்புறுதி தொகை ரூ.1227,63,78,690/(1227.63 கோடி) ஆகும். பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியான கணக்கெடுப்பின்படி, 86,48,748 குடும்பங்களுக்கு ரூ.849/ வீதம் கணக்கிடப்பட்ட மொத்த காப்பீட்டுத் தொகை - ரூ.734,27,87,052/ (ரூ.734.27 கோடி) ஆகும். பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியான கணக்கெடுப்பின்படி, 86,48,748 குடும்பங்களுக்கு நிர்வாக கட்டணம் ரூ.50/ வீதம் ரூ.43,24,37,400/ (ரூ.43.24 கோடி) பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் மொத்த காப்புறுதி கட்டணத் தொகை ரூ.7,77,52,24,452/ (ரூ.777.52 கோடி) ஆகும். பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 60 விழுக்காடு ரூ.466,51,34,671/ (ரூ.466.51 கோடி) பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தில் மாநில அரசின் பங்களிப்பு 40 விழுக்காடு ரூ.311,00,89,781/ (ரூ.311 கோடி) ஆக மொத்தம் மொத்த செலவினம் ரூ. 761,12,44,019/ (ரூ.761.12 கோடி) ஆகும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீடு திட்ட பயனாளிகளுக்கும் சிகிச்சை வழங்கப்படுவதுடன், பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீடு திட்ட அட்டை பெற்றுள்ள பிற மாநிலத்தவர்களுக்கும் சிகிச்சை வழங்க உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. 18.09.2018 முதல் 28.08.2023 வரையிலான முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து மொத்த பயனாளிகள் (1.43 கோடி குடும்பங்களில்) 31,27,029 பேர் ரூ.4,780 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர். இதில் ஒருங்கிணைந்த பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீட்டு திட்டத்தின் கீழ் (86,48,748 இலட்சம் குடும்பங்களில்) 16,75,403 பயனாளிகள் ரூ.2,574 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர்.

மருத்துவக் காப்பீடு தொடர்பான ஒப்பீடு:

கடந்த ஆட்சியில் மருத்துவ காப்பீட்டுக்கான பிரிமியம் தொகை ஒரு வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.699/ ஆக இருந்தது, இந்த ஆட்சியில் ரூ.849/ ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் காப்புறுதித் தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.2 இலட்சமாக இருந்தது, தற்போதைய ஆட்சியில் ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சிக்காலத்தில் சிகிச்சை முறைகள் 1450 ஆக இருந்தது, தற்போதைய ஆட்சியில் 1513 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 970, தற்போதைய ஆட்சியில் 1829 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டு எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பிரத்யேக சிகிச்சை முறைகளின் எண்ணிக்கை 2, தற்போதைய ஆட்சிக் காலத்தில் 8 ஆக உயர்ந்துள்ளது. அந்த வகையில் காப்பீட்டு திட்டம் என்பது பெரிய அளவில் பயன்பாட்டில் இருக்கின்றது. அதேபோல் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் மூலம் பெரிய அளவில் இன்னொரு சிறப்பான திட்டமும் உள்ளது. இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 திட்டத்தின் படி, 2021 டிசம்பர் திங்கள் 18 ஆம் தேதி தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் மேல்மருவத்தூர் மருத்துவ கல்லூரியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. விபத்துகளில் சிக்குபவர்களுக்கு உடனடியாக அவர்களை காக்கும் பொருட்டு, முதல் 48 மணி நேரத்தில் ஒரு லட்சம் ரூபாய் தரும் வகையில் அந்தத் திட்டம் அப்போது தொடங்கி வைக்கப்பட்டது. அத்திட்டத்தின் மூலம் இதுவரை பயன்பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 1,81,860 பேர்,

இதன் மூலம் அரசின் காப்பீட்டு திட்டத்தின் மூலம் செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ.159.48 கோடி ஆகும். இதில் அரசு மருத்துவமனைகளில் 237களிலும், தனியார் மருத்துவமனைகள் 455களிலும் ஒட்டு மொத்தமாக 692 மருத்துவமனைகளில் இத்திட்டம் பயன்பாட்டில் இருக்கின்றது. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை பொறுத்தவரை இந்தியாவிற்கே வழிகாட்டும் அமைப்பாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் யாரும் விடுபட்டு போகக்கூடாது என்கின்ற வகையில் இந்த சிறப்பு முகங்கள் இன்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது.

மேலும் மருத்துவத்துறையின் அடுத்த கட்டமாக மருத்துவ ஆராய்ச்சி மையம் சென்னை, கிண்டியில் உள்ள டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தோம். அந்த வகையில் ஒரு மகிழ்ச்சியான செய்தி. டாக்டர் எம் ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.100 கோடி செலவில் மிகப்பெரிய மருத்துவ ஆராய்ச்சி மையம் ஒன்று கலைஞர் நூற்றாண்டு மருத்துவ ஆராய்ச்சி மையம் என்கின்ற பெயரில் புதிய கட்டிடம் டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட உள்ளது. அதற்கான இடம் தேர்வு செய்து, திட்டப் பணிகள் மற்றும் வரைபடப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மிக விரைவில் அந்தப் பணிகள் முடிவடைந்து, ஒப்பந்தப் பணிகள் தொடங்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட உள்ளது. எனவே சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்துள்ளார். மேலும் அவர் 1967, 1971 ஆகிய சட்டமன்ற தேர்தல்களில் சைதாப்பேட்டை தொகுதியில் நின்று அமைச்சர் மற்றும் முதலமைச்சர் என்கின்ற நிலையை அடைந்துள்ளார். எனவே அவர் பெயரில் டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் கலைஞர் நூற்றாண்டு மருத்துவ ஆராய்ச்சி மையம் ரூ.100 கோடி செலவில் அமைய உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகரட்சி மண்டலக் குழுத் தலைவரும் பகுதிச் செயலாளருமான இரா. துரைராஜ், இணை இயக்குநர் மரு.ரவிபாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், உயரலுவலர்கள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை மதுரவாயலில் உள்ள எம்.ஜி.ஆர். கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் சார்பாக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அரசுப் பள்ளி ஆசிரியர்களின் சிறந்த பணியைப் பாராட்டி விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும் சென்னை எழும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் கலந்து கொண்டு, ஆசிரியர்களின் சேவையை பாராட்டி உரையாற்றி, அவர்களுக்கு விருதுகளையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

### மக்கள் பிரதிநிதிகளின் மனக்குமுறல்!

# எல்லா முடிவுகளிலும் எதேச்சாதிகாரமாகவே ஒன்றிய அரசு செயல்படுகிறது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, செப்.11

பத்து ஆண்டுகளாக ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பா.ஜ.க. அரசு, முக்கிய முடிவுகள் எல்லாவற்றிலும் எதேச்சதிகாரமாகவே செயல்படுகிறது என ‘தினகரன்’ நாளேடு 10.9.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-



தினகரன்

செப்டம்பர் 10, 2023 ஞாயிற்றுக்கிழமை

எதேச்சதிகாரம் தந்த பாதிப்பு

மக்களுக்கான அரசை மக்களே தேர்ந்தெடுப்பது தான் ஜனநாயகம். அப்படி தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயக அரசின் சிறப்பே, எந்த பிரச்னையிலும் கூட்டு முடிவு எடுப்பதில் தான் இருக்கிறது. ஆனால், 10 ஆண்டுகளாக ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பா.ஜ.க. அரசு, முக்கிய முடிவுகள் எதையும் கூட்டாக எடுப்பதில்லை. எல்லா முடிவுகளிலும், எதேச்சாதிகாரமாகவே செயல்படுகிறது என்பது மக்கள் பிரதிநிதிகளின் மனக்குமுறல்.

ஒரே நாள் இரவில், ஒன்றிய அரசு அமலுக்கு கொண்டு வந்த பணமதிப்பிழப்பு நடவடிக்கை இதற்கொரு பெரும் உதாரணம். இதேபோல் ஜிஎஸ்டி, உதய்திட்டம், புதிய வேளாண் சட்டங்கள், நீட்தேர்வு, உயர்பிரிவினருக்கு வேலைவாய்ப்பில் 10சதவீத இடஒதுக்கீடு என்று பல்வேறு திட்டங்கள், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை மீறியே அமலுக்கு வந்தது.

இந்த வகையில் இந்தியாவுக்கு பாரத் என்ற பெயர் மாற்றமும், ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டமும் லேட்டஸ்ட் சர்ச்சைகளாக உருவெடுத்து நிற்கின்றன. டெல்லியில் தற்போது நடந்து வரும் ஜி20 மாநாட்டில், இந்திய குடியரசுத் தலைவர், பாரத் குடியரசு தலைவராக மாற்றம் செய்யப்பட்டார். தொடர்ந்து பிரதமர் மோடியின் முன்பும், நாட்டின் பெயர் பாரத் என்றே இருந்தது.

வெளிநாடுகளிலிருந்து வந்த அத்தனை தலைவர்களும் இந்தியா என்று குறிப்பிட்ட நேரத்தில், பிரதமரின் முன்பு பாரத் என்ற பெயர் எழுதி வைக்கப்பட்டிருந்தது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. இது ஒரு புறமிருக்க, எதேச்சாதிகாரத்தோடு இந்த அரசு காட்டும் அலட்சியமும், எளிய மக்களுக்கு பெரும் பாதிப்புகளை உருவாக்குகிறது.

கடந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில், தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் அமல்படுத்தப்பட்டது. ஏழைகளுக்கு ரேஷன் உணவு பொருட்கள் வழங்குவது மிகவும் முக்கியம் என்று இந்த சட்டம் வலியுறுத்துகிறது. தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ், 67 சதவீத மக்கள், ரேஷன் உணவு பொருட்களை பெறுவதற்கு தகுதியானவர்கள்.

இதன்படி நாட்டில் 95 கோடி பேருக்கு உணவு பொருட்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால், தற்போது 81 கோடி மக்களுக்கு தான் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ், புதிய பயனாளர்கள் சேர்க்கப்படாமல், 2 ஆண்டுகளாக 14 கோடி பேருக்கு உணவு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.

10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி, இந்த திட்டத்தின் கீழ் புதிய பயனாளர்கள் சேர்க்கப்படாமல் இருப்பதே இதற்கு காரணம். இதனால் 2 ஆண்டுகளாக 14 கோடி பேருக்கு உணவு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த, திறனற்று நிற்பதே இதற்கு முக்கிய காரணம். 2011-ஆம் ஆண்டுக்கு பிறகு, கடந்த 2021-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தி இருக்க வேண்டும்.

இந்தியாவில் 1951-ஆம் ஆண்டு முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு தவறாமல் நடந்து வந்துள்ளது. குறிப்பிட்ட காலக் கெடுவுக்கு பின்னும், இதை நடத்தாமல் இருப்பது வரலாற்றில் இல்லாத மிகப்பெரிய தோல்வி. 2011-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஜாதிகளின் சமூக, பொருளாதார நிலை குறித்த கணக்கெடுப்பையும் அரசு மறைத்துள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாமல், பிற்பட்ட சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களின் நிலையை அறிய முடியாது. இதை அறியாமல், நாட்டில் வளர்ச்சி மற்றும் சமூக நீதியை ஏற்படுத்த இயலாது என்பது சமூக மேம்பாட்டு ஆர்வலர்களின் ஆதங்கம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி பல்லாவரம் தர்கா காலனி பகுதியில் மண்டல தலைவரும் பகுதி கழகச் செயலாளர் ஆன இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் கரூர் முரளி, மாவட்ட கழக துணை செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினர். உடன் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.